# <u>Sub Court, Eraniel</u>

O.S. No.19/2025
Date: 20.07.2026.
PW- 1 திரு. ரமேஷ்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>ஒன்று மற்றும் இரண்டாம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்பொழுது எந்த ஊரில் குடி இருக்கிறேன் என்றால், மண்டைக்காட்டில் எத்தனை வருடமாக குடி இருக்கிறேன் என்றால், 45 வருடமாக குடி இருக்கிறேன் நானும் என் அம்மாவும் ஒன்றாக தான் வசிக்கிறோம் என்றால், ஆமாம். என் தாயாரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால், ஆமாம். வழக்குப்பட்டிகை சொத்து என்னுடைய தாத்தா சொத்து என்பதை காண்பிக்க எந்த ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், பண்ணியிருக்கிறேன். அந்த ஆவண எண் என்ன என்று தெரியுமா என்றால், தெரியாது. வழக்குப்பட்டிகை சொத்து என்னுடைய மூதாதையர் சொத்து இல்லை என்றாலும் என்னுடைய தாத்தா கிரயம் வாங்கிய சொத்து என்றாலும், ஆமாம் என்னுடைய தாத்தா சொத்தில் தான் நான் பாகம் கேட்கிறேன். என் தாத்தா 1993 இல் இறந்த பிறகு அவருடைய வாரிசுகள் எல்லாம் சேர்ந்து பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால், எங்களுக்கு தெரியாமல் பாகம் பிரித்துக் கொண்டார்கள். எங்களுக்கு தெரியாமல் பாகப்பிரிவினை செய்து கொண்ட ஆவணத்தை ரத்து செய்து கொடுக்குமாறு நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்கவில்லை என்றால், கேட்டிருக்கிறோம்.

நான் சொன்னது போல் பரிகாரம் எதுவும் நீதிமன்றத்தில் கேட்கவில்லை என்றாலும் பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பிரித்துக் கொண்ட சொத்தினை அவரவர்கள் தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால், நான் ரத்து செய்ய கேட்டிருக்கிறேன் ஆனால் பிரித்துக் கொண்டபடி அவர்கள் அனுபவத்தில் தான் இருக்கிறது. அந்த ஆவண தரப்பினர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், அவர்களை சேர்க்கவில்லை என் அப்பாவுடைய பங்கை மட்டும் தான், எனக்கு உள்ளதை கேட்கிறேன். எனக்கு பாகப்பிரிவினை செய்து

கொண்ட ஆவணத்தில் எந்த ஆட்சேயபனையும் இல்லை என்றாலும், அந்த ஆவணத்தின் படி என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பங்கு தான் நான் கேட்கிறேன் என்றாலும், ஆமாம். பாகப்பிரிவினைப்படி என் அப்பாவுக்கு கிடைத்த வழக்குப்பட்டிகை A சொத்தை என் அப்பா இரண்டாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்திருக்கிறார் என்றாலும், அந்த சொத்தை தான் நான் கேட்கிறேன் என்றாலும், எனக்குள்ள பாகத்தை தான் கேட்கிறேன் எனக்கு தெரியாமல் விற்பனை செய்ய இயலாது.

என் தகப்பனார் சம்பாதித்த சொத்தை நான் கேட்கவில்லை .எனக்கு இரண்டு வயது இருக்கும் பொழுது என் அம்மா என் அப்பாவிடம் இருந்து என்னை பிரித்து எடுத்து மண்டைக்காடுக்கு அழைத்து சென்று விட்டார் என்றால், தவறு. எப்பொழுது என் அம்மா பிரிந்து சென்றார் என்றால், நான் கைக்குழந்தையாக மூன்று அல்லது நான்கு மாதங்கள் இருக்கும்பொழுது என் அம்மாவையும் என்னையும் என் அப்பா விரட்டிவிட்டார். அதன் பிறகு என் மாமா தான் என்னை பார்த்தார் எட்டு வயதிலிருந்து நான் ரொம்பவும் சிரமத்தில் தான் இருந்தேன். என் அம்மா என் அப்பாவிடம் இருந்து பராமரிப்பு தொகை கேட்டு அசல் வழக்கு எண்.182/2000 தாக்கல் செய்தார் என்றால், அதெல்லாம் எனக்கு தெரியாது. அந்த அசல் வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது நான் கைக்குழந்தையாக இருக்கும் பொழுது என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வருவார். என் அப்பா அவருக்கு கிடைத்த பாகத்தை அவர் விற்பனை செய்திருக்கிறார் என்றாலும், அதை விற்பனை செய்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது என்றாலும், அதை நான் கேள்வி கேட்க முடியாது என்றாலும், எனக்கு அருகதை இல்லை என்றாலும், என் அப்பாவுடைய சம்பாதியத்தில் வாங்கிய சொத்தை நான் கேட்கவில்லை என்னுடைய அப்பாவின் அப்பாவுடைய சொத்து என்பதால் தான் நான் அதில் பாகம் கேட்கிறேன். என் அப்பா 1993 லேயே வழக்கு A பட்டிகை சொத்தை விற்பனை செய்து விட்டார் என்றாலும், நான் மிகவும் காலதாமதமாக தற்பொழுது நீதிமன்றத்தை அணுகியிருக்கிறேன் என்றாலும், எனக்கு விவரம் தெரிந்தவுடன் வழக்கை தாக்கல் செய்து விட்டேன். அந்த கிரயம் பற்றிய விவரம் எனக்கு எப்படி தெரியவந்தது என்றால், நான் ஆவண எழுத்தாளரை பார்த்தேன் அப்போது வில்லங்கம் போட்டு பார்த்த பொழுது விற்பனை செய்த விவரம் தெரிந்து கொண்டேன், வழக்கு A பட்டிகைக்கு சொத்து காலி மனை என்றாலும்,

நான் சொல்வது போல் அது வீடு கிடையாது என்றாலும், நான் வீட்டில் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்று சொல்வது தவறு என்றாலும், என் அப்பா குடியிருந்தார் என்று நான் சொல்லவே இல்லை. நான் பிரதிகளுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு நிலைக்காது என்றால், சரியல்ல. நான் என் பாகத்தை தான் கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன். நான் இந்த வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்ததால் காலவரையறை சட்டப்படி இந்த வழக்கு நிலைக்காது என்றால், எனக்குத் தெரிந்த பிறகுதான் நான் தாக்கல் செய்ய முடியும் அதனால் தெரிந்தவுடன் தாக்கல் செய்து விட்டேன். ஏற்கனவே பாகம் பிரித்த சொத்து என்றாலும் நான் இந்து கூட்டுரிமை சொத்து என்று சொல்வது தவறு என்றாலும் சரியில்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், நான் எனக்குள்ள உரிமையை தான் கேட்டிருக்கிறேன்.

இதர பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.